# DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 136/ 2021 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 2 |
| Name | திரு. முருகன் |
| Husband Name | கனிநாடார் |
| Village | கிளாக்குளம் |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | 45 |

(2,4ம் எதிரி ஆஜர் – 1,3 எதிரிகள் ஆஜரில்லை: 1,3 எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317(2)ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜர்) )

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 31-07-2026.(நேரம்:01.00) (Crmp No.292/2026 என்ற மனு நடவடிக்கையில் இந்த நீதிமன்றம் பிறப்பித்த அனுமதி உத்தரவின் பேரில் சாட்சி மீள அழைக்கப்பட்டு எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்)**

**குறுக்கு விசாரணை**

1. சம்பவம் நடைபெற்ற தேதியில் எங்கள் ஊரில் கோவில் கொடை என்றால் சரிதான்.

2. 1ம் எதிரிக்கும் என் மகனுக்கும் நடுவே ஏற்கனவே தகராறு இருக்கிறது என்றால் சரிதான்.

3. என் மகன் அசா 1 ஊரில் விளையாட்டு போட்டி நடக்கும் போது கலந்து கொள்ள கூடிய அளவிற்கு நல்ல உடல் தகுதி உள்ள நபர் என்றால் சரிதான்,

4. காயமடைந்த மகனை நானும் என் மனைவியும், என் தம்பியும் திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு என் ஊர்க்காரர் ஒருவர் ஆட்டோவில் அழைத்து சென்றோம் என்றால் சரிதான்.

5. வழக்கு சம்பந்தமாக போலீசார் எப்போது சம்பவம் குறித்து வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் சம்பவத்திற்கு மதியம் 2 மணிக்கு வாங்கினார்கள்.

6. போலீசார் என்னிடம் சம்பவம் குறித்து விவரமாக கேட்டு அவர்கள் கைப்பட எழுதி என்னிடம் படித்து காண்பித்து கையெப்பம் வாங்கினார் என்றால் சரிதான்.

7. வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று நான் என்னுடைய மகனுக்காக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 2
ஸ்ரீவைகுண்டம்.